அந்த ஒப்பந்தத்தைப் பாதிக்காத வகையிலே உருவாக்கலாம் என்று தொழில் நுட்ப கருத்து இருக்கின்றது. அந்த அடிப்படையிலே இந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாம் என்று இருக்கிறோம்.

திருவில்லிப்புத்தூரில் சப்கோர்ட் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 22—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூரில் சப்கோர்ட் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதுமுதல் நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆண்டு (ஆ): இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, மேற்கு இராமநாதபுரத்தைப் பொறுத்தவரையில் சப் கோர்ட் கிடையாது. திருவில்லிப்புத்தூரில் இரண்டு முன்சிப் கோர்ட்டுகளும் இரண்டு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளும்தான் இருக்கின்றன. சாத்தூரில் இரண்டு முன்சீப் கோர்ட்டுகளும், இரண்டு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளும் இருக்கின்றன. ஆரம்பிக்க தேவையானகேஸ்கள் இருக்கின்றன. ஆகவே மேற்கு இராமநாதபுரத்திலே இருப்பவர்கள் 100 மைல் தள்ளி சிவகங்கை, மதுரைக்கு 50 மைல் தள்ளி தங்களுடைய வழக்குகளுக்காகப் போக வேண்டி இருக்கின்றது. ஆகவே வருகின்ற நிதியாண்டிலேயாவது அங்கே ஒரு சப்கோர்ட் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, மேல் முறையீடு அதிகார வரம்புகளை உபயோகப்படுத்தி திருவில்லிப்புத்தூரில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கவேண்டும் என்று நீதிமன்றத்தின் அதிகாரவரம்புகுழுபரிந்துரை செய்துள்ளது. அரசு அவைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதிலே இரண்டாவது கட்டத்திற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, வரதராஜன் கமிட்டி எந்தெந்த இடங்களில் எந்தெந்த கோர்ட்டுகளை நிறுவவேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளனர், அரசு அதில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, திருவில்லிப் புத்தூரில் சப்போர்ட் அமைப்பதைப் பற்றியது. நீங்கள் கேட்பது வரதராஜன் கமிட்டி பற்றியது..........

திரு. ரா. கிருஷ்ணன்: இரண்டிற்கும் தொடர்பு இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோர்ட்டுகளில் இருக்கும் வழக்குகள் அனைத்திலும் கூட தொடர்புகள் இருக்கும். அதனால் மூலக் கேள்வியை ஒட்டிக் கேளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : வரதராஜன் கமிட்டியில் எந்தெந்த யிடங்களில் கோர்ட்டுகள் நிறுவப்பெற வேண்டும் என்று பரிந் துரை செய்யப் பெற்றது. அவைகளில் எது எதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய எல்லாக் குறிப்புகளும்என்னிடத்தில் இல்லை என்றா லும், இதற்கு முன்பே கொள்கைக் குறிப்பில் வரதராஜன் கமிட்டி பரிந்துரை செய்ததில் 10 கோர்ட்டுகள் நிறுவ நடப்பு ஆண்டில் அனுமதி வழங்கப்பெற்றுவிட்டது என்றும், அடுத்த 11 கோர்ட்டு களை நிறுவுவதற்கான அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப் பெற்று வருவதாகவும் குறிப்பிட்டிருக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூரில் சப்-கோர்ட் அமைக்கப்பெறுமா என்று கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொன் னார்கள். ஸ்ரீவில்லிபுத்தூரில் சப்-டிவிஷன் கோர்ட்டுதான் இருக் கிறது. அந்தக் கோர்ட்டில்தான் கிரிமினல், சிவில் ஆகிய இரண்டு வழக்குகளையுமே எடுத்து நடத்திக் கொண்டு இருக்கிறார்கள் இவைகளுக்கெல்லாம் ஒரே சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்தான் இருக்கிறார். அவர்தான் அனைத்தையும் நடத்திக்கொண்டிருக் கிறார். ஆகையால் அங்கே முனிசிபல் கோர்ட்டாவது உடனடி யாக அமைக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களின் ஆலோசனை ஏற்று பரிசீலிக்கப்படும்.